**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.222/2025</u>**

**<u>நாள் : 11.02.2026</u>**

**ம.சா.** 1 மணி மேகலை

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன் . நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 25 4 2013 இரவு 11 மணியளவில் நடந்த விபத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக போலீசில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் பயணித்த பேருந்தின் பதிவு எண் எனக்கு தெரியும். அது TN 30 BJ 1199. மேற்படி பேருந்தை இதுநாள் வரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து தேதியில்வ எனது கணவர் பேருந்தில் பயணித்ததற்கான டிக்கெட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்ல என்றால் சரியல்ல. சாட்சி ஆவணங்களை படித்து பார்த்து டிக்கெட்டை தாக்கல் செய்யவில்லை என்று ஒப்புக்கொள்கிறார். விபத்தினை பற்றி மற்றவர்கள் சொல்ல கேட்டு தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். இதைத் தவிர மற்ற எந்த விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கு நிரந்தர வருமானம் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தை நான் நேரில் சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தானது நடந்த மேட்டுர்- மேச்சேரி மெயின் ரோட்டில் சன்ரைஸ் தாபா எதிரில் பேருந்துக்கு முன்பாக லாரி சென்றது. அந்த லாரிக்கு நான்கு சக்கரங்களா அல்லது ஆறு சக்கரங்களா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்தானது பொறுப்புணர்ச்சியுடன் மெதுவாகத்தான் செல்லும் என்றால் சரிதான். ஒரு பேருந்து ஓட்டுநரின் பிரதான கடமையானது பயணிகளை பாதுகாப்புடன் உரிய இடத்தில் சேர்க்கவேண்டியது என்றால் சரிதான். இந்த விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்தாரரான முருகன் என்பவர் எனக்கு உறவினரோ, தெரிந்தவரோ அல்ல என்றால் சரிதான். மேற்படி முருகனை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். மேற்படி முருகன் விபத்து சம்பந்தமாக எந்த ஒரு விவரமும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் மண்ரோட்டில் விபத்து நடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையில்

விபத்துநடந்த சமயம் இரவு நேரமாக இருக்கும் நிலையில் முன்னால் லாரி முகப்பு விளக்கையோ, அல்லது சிவப்பு விளக்கையோ போட்டுக்கொண்டு போனதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். லாரியின் டிரைவர் பின்னால் வரும் பேருந்தை கவனித்து வாகனத்தை இயக்கியிருக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு கவனத்துடன் இல்லாமல் பிரேக் போட்டாலோ அல்லது திடீரென்று வலதுபுறமிருந்து இடதுபுறமாக திரும்பினாலோ விபத்து ஏற்பட வாய்ப்புண்டு என்றால் அதுபற்றி என்னால் கருத்து தெரிவிக்க இயலவில்லை. பேருந்தின் ஓட்டுநரும், லாரியின் ஓட்டுநரும் முறைப்படி சாலை விதிகளை கடைபிடித்து வாகனங்களை ஓட்டியிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். லாரி மற்றும் பேருநது ஆகிய இருவாகனங்களின் ஓட்டுநர்களின் கவனக்குறைவுதான் விபத்திற்கு காரணம் என்றால் சரிதான். சன்ரைஸ் தாபா அருகே பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தில் பேருந்து நிறுத்தம் இருந்ததால் பயணிகளை நின்று ஏற்றிச்சென்ற பேருந்தானது வேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றால் தெரியவில்லை. இருவாகன ஓட்டிகளும் பொறுப்புடன் சாலை விதிகளை பின்பற்றியிருந்தால் விபத்து நடந்திருக்க வாய்ப்பிருக்காது என்றால் அவ்வாறு சொல்லமுடியாது. விபத்திற்கு காரணமே இருண்டு வாகன ஓட்டிகளின் அஜாக்கிரதையும், தவறுகையும்தான் என்றால் சரியல்ல, பஸ் டிரைவர்மீதுதான் தவறு உள்ளது, லாரி டிரைவர்மீது எந்த தவறும் இல்லை. லாரி டிரைவர் மீது தவறு என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் லாரி முன்னால் சென்றது, அதற்கு பின்னால் பேருந்து சென்றது, எனவே பின்னால் சென்ற பேருந்துதான் முன்னால் சென்ற லாரிமீது மோதியிருக்கும் என்று கூறுகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் எந்த ஒரு இடத்திலும் லாரி டிரைவர் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. முன்னால் சென்ற லாரியானது பின்புறமாக வந்த பேருந்தை கண்ணாடி வழியாக பார்த்து சிக்னல் போட்டிருந்தால் விபத்து நடந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. லாரி மெதுவாகத்தான் சென்றது. லாரி மெதுவாக சென்றதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். முன்னால் சென்ற லாரி சிக்னல் போடாமல் சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. லாரி டிரைவரின் தவறானது முதல் தகவல் அறிக்கையில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்த நபர் அரசு பேருந்து நடத்துநர் என்றால் சரிதான் (அதவாது அரசு பேருந்தின் நடத்துநர் சம்பந்தப்பட்ட தனியார் பேருந்தில் பயணித்ததாக தெளிவுபடுத்தப்பட்டது). விபத்து சமயத்தில் பேருந்தில் பயணித்த எனது கணவரோ, மற்ற காயம்பட்ட பயணிகளோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதே பேருந்தில் பயணித்த மற்றொரு அரசு பேருந்தின் நடத்துநர்தான் புகார் கொடுத்துள்ளார். அதில் எந்த தவறும் இல்லை என்று சாட்சி கூறுகிறார். முதல் தகவல் அறிக்கையில்

சொல்லப்பட்ட காயம்பட்ட நபர்களின் ஊர் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்கள் அனைத்தும் புகார் கொடுத்த நபருக்கு நேரடியாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்காத நிலையிலும், விபத்து நடந்த இடத்திற்கு செல்லாத நிலையிலும் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து நடந்ததாக சொல்வது தவறானது என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநரின் கவனக்குறைவும்தான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது லாரி ஓட்டுநரின் தற்சார்பு கவனமின்மையும் காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு இரு ஓட்டுநரின் கவனமின்மையும் காரணம் என்பதால் 2, 4 எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனமானது இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தின் சம்பந்தப்பட்ட பேருந்தின் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். லாரி சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அதனையும் சேர்த்துதான் தாக்கல் செய்துள்ளேன். லாரியின் தகுதிச்சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை, சாட்சியிடம் தகுதிச்சான்று என்றால் என்னவென்று கேட்டதற்கு அது பற்றி தெரியாது என்று கூறுகிறார். ம.சா.ஆ.9 ஆவணம் அமைப்பு சாரா தொழிலாளர் மையத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள நிலையில் அதில் அரசு முத்திரை போடப்படவில்லை என்றால் சரிதான். அதில் சேலம் மாவட்ட சாலையோர விற்பனையாளர்கள் சங்கம் (CITU) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு கட்சியின் கொடியும், சின்னமும் உள்ளது என்றால் சரிதான்.எனது கணவர் வைத்திருந்த பானிபூரி கடையானது சாலையோர கடை ஆகும். அவ்வாறு சாலையோரத்தில் வைத்திருக்கும் நபர்களுக்கெல்லாம் சேலம் மாவட்டத்தில் சாலையோர விற்பனையாளர்கள் சங்கம் என்று உள்ளது,. எனது கணவர் பானிபூரி கடை வைத்திருந்ததற்கு வரி ரசீது உள்ளதா என்றால் இல்லை, சாலையோர கடைகளுக்கு வரிரசீது வழங்கப்படுவதில்லை. ம.சா.ஆ.1 ஆவணமானது எனது கணவர் செய்த தொழிலை மெய்ப்பிப்பதற்கு உகந்த ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. எனது கணவரின் வருமானத்தை கட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பேருந்தின் கவனக்குறைவு மட்டுமே முழுக்க முழுக்க காரணம் அல்ல என்றால் சரியல்ல, விபத்திற்கு இரண்டு வாகனங்களின் உரிமையாளரும், ஓட்டுநரும், காப்பீட்டு நிறுவனமும்தான் பொறுப்பேற்கவேண்டியது என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரர் மட்டுமே இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

4ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்த மனுவில் பக்கம்–5 பாரா–2ல் 25.04.02023ஆம் தேதி 11 மணியளவில் சன்ரைஸ் தாபா அருகே மேட்டூர்–மேச்சேரி மெயின் ரோட்டில் TN 30 BJ 1199

என்ற பதிவு கொண்ட 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்தினை அதன் ஓட்டுநர் மேட்டூரிலிருந்து மேச்சேரி நோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்ற நிலையில் அதற்கு பின்னால்தான் TN 28 BJ 1639 என்ற 3ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான லாரியை அதன் ஓட்டுநர் மெதுவாக ஓட்டிச் சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வேகமாக சென்ற பேருந்து லாரியின் பின்புறத்தில் மோதியதாக சொல்லியுள்ளேன் என்று சாட்சி கூறுகிறார். விபத்திற்கு முழுக்க காரணமே பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவுதான் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் பக்கம்–6ல் 3, 4 எதிர்மனுதாரர்களான லாரியின் உரிமையாளர் மற்றும் இன்சூரன்ஸ் நிறுவனத்தை உரிய தரப்பினர்களாக வழக்கில் சேர்த்ததாக என்றால் சரிதான். அதேபோல் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் 1, 2 எதிர்மனுதாரர்கள் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3, 4 எதிர்மனுதாரர்களை பொருத்து வழக்கு தள்ளுடிய செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.1ல் TNSTC மேட்டூர் கிளையின் நடத்துநரான முருகன் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகார் கொடுதத முருகன் விபத்துக்குள்ளான பேருந்தின் டிரைவரின் சீட்டுக்கு பின்னால் முன்புற படிக்கட்டுக்கு அருகில் உள்ள முதல்சீட்டில் அமர்ந்திருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் கொடுத்த புகாரில் பேருந்தின் ஓட்டுநர்தான் வேகமாக ஓட்டிச் சென்ற லாரியின் பின்புறமாக மோதியதால் விபத்து ஏற்பட்டதாக சொல்லியதன் அடிப்படையிலேயே குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.